திருப்பெரும்புதூர் தொகுதி –

வரதராஜபுரம் பகுதியில் மழை வெள்ளம் - குறைகள் தீர்க்கப்படும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, டிச.15- சட்டப் பேரவையில் திருப்பெரும்புதூர் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை எழுப்பிய கேள்வியும் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:-

கு.செல்வப்பெருந்தகை: கடந்த வாரம் பெய்த மழையால் வரதராஜபுரம் பகுதியில் முல்லை நகர், தனலட்சுமி நகர், PTC நகர், அஷ்டலட்சுமி நகர் போன்ற இடங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டதை பத்திரிக்கை, தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். உங்களிடம் எடுத்து வந்து காண்பித்தேன். நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர், எதையெடுத்தாலும் முழுமையாக செய்யக் கூடியவர். அரைகுறையாக செய்யாதவர். அதை நாடு அறியும். ஆனால், அந்தப் பகுதியில் என்னுடைய தொகுதியான வரதராஜபுரம் பகுதியில் அரைகுறையாக வேலை நடந்திருக்கிறது. முழுமையாக வேலை நடைபெறவில்லை.

ஆனால், முன்பு ஒரு காலத்தில் எல்லாம் மழை, வெள்ளம் வந்தால் பத்து நாட்கள், இருபது நாட்கள் தண்ணீர் தேங்கி நிற்கும். உங்களுடைய முயற்சியால் இப்போது ஒரு நாளில் வடிந்து விடுகிறது. இருந்த போதிலும் நான் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் Thiruppugazh Committeeயுடைய பரிந்துரை இருக்கிறது. Thiruppugazh Committeeயினுடைய பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றினால்தான் அங்கே தண்ணீர் இல்லாத பகுதியாக அந்தப் பகுதியைப் பார்க்கமுடியும். கடந்த காலத்திலிருந்து நீங்கள் இதற்கு முன்பு இருக்கும் போது, ஒரு அறிக்கையை தாக்கல் செய்து இருக்கிறீர்கள். அதில் ஓரத்தூர் ஏரி, படப்பை ஏரி, மணிமங்கலம் ஏரியை நீர்தேக்கமாக மாற்றினால் அந்தப் பகுதியில் தண்ணீர் வராது.

ஆகவே, திருப்புகழ் கமிட்டியைஎங்களு டைய அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நிறைவேற்றுவார் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். எல்லா இடத்திலும் இருப்பதுபோல நெருக்கடி எனக்கும் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஒரு உத்தரவாதம் கொடுத்திருக்கிறேன். வருகின்ற நிதி நிலை அறிக்கையில் எங்களுடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் திருப்புகழ் கமிட்டியை நிறைவேற்றவில்லையென்று சொன்னால், நான் சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்வது அது அவர் கையில்தான் இருக்கிறது என்று.

ஆகவே நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: உறுப்பினர் நன்றாக என்னிடம் மாட்டிக்கொண்டார். அவர் அடுத்தமுறை சட்டமன்ற உறுப்பினராக வருவது என் கையில்தான் இருக்கிறது. திருப்புகழ் கமிட்டி மட்டுமல்ல. திருவாசகம் கமிட்டி கொடுத்தாலும் சரி. நீங்கள் கூறியது எனக்குத் தெரியும். அதற்காக முந்தைய நாள் கூட அதிகாரிகளை அழைத்து பேசியிருக்கிறேன். கவலைப்பட வேண்டாம். குறை தீர்க்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

நிதித்துறையின் அனுமதி பெற்று

மின் வாரியத்தில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை!

சட்டப்பேரவையில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தகவல்!

சென்னை, டிச.15- நிதித் துறையின் அனுமதி பெற்று, மின் வாரியத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சட்டப்பேரவையில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இது குறித்து சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அளித்த பதில்களும் வருமாறு:-

துரை. சந்திரசேகரன்: மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— (அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மாதவரம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

ஆம் எனில், எப்போது?

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மாதவரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 11 மின்மாற்றிகள்மூலம் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

துரை. சந்திரசேகரன்: அமைச்சர் அவர்களுடைய பதிலில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அதேநேரத்தில் நாங்கள் குறிப்பிட்டு கேட்பது என்னவென்றால், சோழவரம் ஊராட்சியிலுள்ள மாதவரம் பஞ்சாயத்தில். . .

Muslim nagar முதல் மாதவரம் காலனி இடையே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அங்கே ஒரு 100 KVA மின் மாற்றி ஏற்படுத்தினால், சோழவரம் முழுமைக்கும் மின்சார supply என்பது மிகச் சிறப்பாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி: பொன்னேரி தொகுதியில் மட்டும், புதியதாக 5 மின்மாற்றிகள் அதிக மின் பளுவை குறைப்பதற்கும், 6 புதிய மின் மாற்றிகள் குறைந்த மின் அழுத்தத்தை சீர்செய்வதற்கும் என மொத்தம் 11 புதிய மின் மாற்றிகள் நிறுவ திட்டமிடப்பட்டு, இதுவரை 3 மின்மாற்றிகள் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 மின்மாற்றிகளை நிறுவக்கூடிய பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. Muslim nagar பகுதியில் ஏற்கெனவே 100 KVA மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தேவையேற்படின் அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து இந்த ஆண்டில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

துரை. சந்திரசேகரன்: மீஞ்சூர் பேரூராட்சியில் சுமார் 18,000 மின் இணைப்புகள் இருக்கின்றன. அங்கே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அப்போதைய அமைச்சர் நேரு அவர்களும் நிறைய மின் உற்பத்தி நிலையங்களை அங்கே தொடங்கி அண்டை மாநிலங்களுக்கெல்லாம் மின்சார உற்பத்தி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், மீஞ்சூர் பகுதியில் மின் பற்றாக்குறை என்பதும், அறிவிக்கப்படாத மின் தடை என்பதும் இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் என்னவென்று ஆய்வு செய்தபோது, போதிய மின் ஊழியர்கள் அங்கு இல்லையென்று சொல்கிறார்கள். அதைவிட முக்கியமாக அங்கே நீண்ட நாட்களாக மக்களுடைய கோரிக்கை துணை மின் நிலையம். வளர்ந்து வருகின்ற நகரம், துணைமின் நிலையம் அமைக்கப்பட வில்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தக் கோப்பு வருவாய்த் துறையிலே இருக்கிறது. அதேபோல தற்போது இருக்கின்ற அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதுவும் பழுதடைந்து, இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உதவி செயற்பொறியாளர் பணியிடம் கூட அங்கு காலியாக இருக்கிறது. இதன் காரணமாக அங்கு மின் பற்றாக்குறையும், மின் தடையும் ஏற்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் மிக விரைந்து செயல்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: மின் வாரியத்திலுள்ள குறிப்பிட்ட சில காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நிதித் துறையினுடைய அனுமதி கோரப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பணியிடங்களை நிரப்புவதற்கு நிதித் துறையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, தேவை ஏற்படக்கூடிய பணியிடங்களை நிரப்புவற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பகுதிகளில் தேவை ஏற்படின் கண்டிப்பாக அங்கு ஆய்வு செய்யப்படும். தேவை ஏற்பட்டால் அவர் சொல்லக்கூடிய கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெ.எம்.எச். அசன் மௌலானா: 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின் மூலமாக வேளச்சேரிக்கு 47.17 கோடி ரூபாய் கொடுத்து, overhead cablesஐ underground cables ஆக மாற்றியிருக்கிறீர்கள். இருப்பினும் underground cables ஆனபிறகு, அந்த overhead cablesஐ கழட்டாமல் underground cablesஐ activate பண்ணாமல், modern transformers போடாமல் இருக்கிறார்கள். அதனால் இந்த மழைக்காலத்தில் பார்த்தீர்களென்றால், ஒரு கம்பி விழுந்து, ஓர் உயிரிழப்பு ஏற்பட்டு, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்கினார்.

இது பொத்தாம்பொதுவாக நடக்கிறது. தயவுகூர்ந்து ஒரு ஆய்வு எங்களோடு வந்து, இங்கு என்ன வேலை செய்திருக்கிறீர்கள், மேலே இருக்கிற overhead cablesஐ எப்போது கழட்டிவிட்டு, underground cablesஐ activate பண்ண போகிறீர்கள்; already activate ஆனது, எப்போது அதை அழுலுக்கு கொண்டுவரப்போகிறீர்கள் என்பதை கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: சென்னை மாநகராட்சிப் பகுதியில் குறிப்பாக உறுப்பினருடைய சட்டமன்ற தொகுதி தான் மின்வாரியத்தினுடைய பணிகள் அதிகமாக தேவைப்படுகிறது. தொடர்ச்சியாக அந்தப் பணிகள் முன்னுரிமை கொடுத்து எடுத்து செய்யப்பட்டு வருகிறது. மீதம் இருக்கக்கூடிய பணிகளும் கடந்த ஆய்வுக்கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் முழுமையாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைந்து அந்தப் பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. கருணாநிதி: பல்லாவரம் தொகுதி அனகாபுத்தூர், பம்மல், பொழிச்சலூர் பகுதிக்கு 33.11 KVல் ரூபாய் 48 கோடியில் புதிய துணை மின்நிலையம் அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்து, குரோம்பேட்டை, அஸ்தினாபுரம் பகுதியில் புல எண் 54/9 களம் புறம்போக்கு 33/11 இடம் தேர்வு செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்தது. அந்த வழக்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக தெரிவித்ததற்கிணங்க, அந்த நிலத்தை கையகப்படுத்தி, இப்போது மின்சார வாரியத்திற்கு ஒப்படைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணி எப்போது தொடங்கப்படும், நிதி ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் செந்தில்பாலாஜி: அந்த நிலம் முழுவதும் மின்வாரியத்தினுடைய வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யக்கூடிய பணிகள் முழுமையாக நிறைவு பெற்றபின்பு, tender கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி பதிலளித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குபகுதி 124 அ வட்ட தி.மு.க சார்பில் கழக கொடியேற்றி, அங்கன்வாடி மையம் குழந்தைகளுக்கு நாற்காலி மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா அங்கன்வாடி மையம் சாரதாபுரம் கேனல் பேங்க் சாலை சந்திப்பில் மாவட்ட பிரதிநிதி ஸ்டோன் வீ.அருண்குமார் தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, 124அ வட்ட கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது. சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார். இக்கூட்டத்திற்கு ஏ. ரேவதி எம்.சி. அ.தவனேசன் , கு.வீரபத்திரன், எம்.பி.மருதமுத்து எம்.பி.எம்., கயிலை ம. கிரிராஜன், என்.வடிவேல்.எஸ்.சரவணன், மூ.உதயசூரியன், கவிதா குமரிமுத்து, என்.வி.லோகநாதன், சி.எஸ். நந்தகுமார், கே.கண்ணன், மு.சரவணன், வெ.சரண்ராஜ், பிரஸ்கே.ரவிகுமார், எம்.அல்ராஜ், டி.ரூப்நாத், ஐ.யோகேஸ்வரன் , பி.சுந்தர், பி.ஆர்.அருண், எம்.ஜி.கர்ணன், கே.வாசுதேவன், மார்கெட்.சாந்தி, எம்.ஜி.கர்ணன், அட்வாகேட் ஜோதிகுமார், தட்சிணாமூர்த்தி பில்டர், எம்.ஜி.எம்.வினோத், டி.என்.ஆதி, எஸ்.ஜோசப், எஸ்.சீனு, ஆர். தயாளன், இ.கோகுல், என்.வி.தீபக், ஏ.சாந்தி, தினேஷ் பில்லா, சத்யா நகர் கே. ஐயப்பன், மயிலை கே.பாலு, பாரிஸ் ஆர்ட்ஸ் ஜே.குமார், டி.தண்டபாணி, எஸ்.ஜே.ஜோசப், மார்கெட்ஆர்.சுரேஷ், வெள்ளை டி.முருகேசன், புரட்சி செல்வம், ஆனந்த்கௌரி, வெங்கடேசன், யராஜன் நாகராஜன், சந்துரு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் மாநகராட்சி வர்த்தக மைய கட்டிடத்தில் நெல்லை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை தொகுதி பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் தர்மன்,பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, துணை மேயர் ராஜ், ஒன்றிய செயலாளர் அருள்மணி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் உள்ளனர்.

நெல்லை மாநகரில்

'நாம் தமிழர்' கட்சியினர் 250 பேர் விலகல்!

அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

நெல்லை.டிச.15- முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும், சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான செயல்பாட்டினை பார்த்தும், நெல்லை மாநகர தி.மு.க ஏற்பாட்டில் நெல்லை வண்ணார்பேட்டை அஃப்னா பார்க்கில் நடைபெற்ற நிகழ்வில் நாம் தமிழர் கட்சியினர் சுமார் 250 பேர்கள் அக்கட்சியிலிருந்து விலகி கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க. ஏற்பாட்டில் நெல்லை வண்ணார்பேட்டை அஃப்னா பார்கில் கழகத்தில் நாம் தமிழர் கட்சியினர் இணையும் நிகழ்வு கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி,மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, துணை மேயர் ராஜு, தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாம் தமிழர் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் பர்வீன் தலைமையில் நாங்குநேரி தொகுதி செயலாளர் அந்தோணி விஜய்,ஒன்றிய செயலாளர் அந்தோணி ராஜ்,நெல்லை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் தேவதாஸ் உட்பட 250 பேர் அக்கட்சியிலிருந்து விலகி கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் அமைச்சர் கே.என். நேரு வரவேற்று கழக இருவண்ண வேட்டியை வழங்கினார்.

குன்னம் தொகுதி - செந்துறை பகுதியில் விடிய விடிய கொட்டித் தீர்த்த கனமழை!

தொகுதி மக்களுக்கு இரவு முழுவதும் உதவி செய்த அமைச்சர் சா.சி.சிவசங்கர்!

அரியலூர், டிச.15- அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை இரண்டு நாட்கள் விடிய விடிய கனமழை கொட்டி தீர்த்தது தகவல் அறிந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செந்துறை பகுதியில் விடிய விடிய தங்கி மழையால் பாதிக்கப்பட்ட தொகுதி மக்களுடன் இணைந்து தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து வந்தார்.

அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்திரவிற்கிணங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு பணிகள் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செந்துறையில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மீட்பு பணிகள் உடனடியாக மேற்கொண்டார்.

அதன்படி செந்துறை ஒன்றியம், முல்லையூர் காலனித் தெரு, செங்கமேடு, தளவாய் ஊராட்சி காலனி தெரு மற்றும் மதுரா நகர் ஆகிய இடங்களை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு குடியிருப்புகளில் ஏற்பட்ட பாதிப்புகள், சாலை பாதிப்புகள், மின்கம்பங்கள் பாதிப்புகள், கால்நடை உயிரிழப்புகள், விளை நிலங்கள் பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும், மழைபாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொது மக்களின் அத்தியாவசியதேவைகளை நிறைவேற்றிட துறைசார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, குழுமூர் மற்றும் நமங்குணம் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவை யான பாய், தலையணை மற்றும் போர்வைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

முன்னதாக குன்னம் சட்டமன்ற தொகுதி ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட் ஆலை அருகே உள்ள சேந்தமங்கலம் ஏரி நிரம்பி கரை உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகும் அபாயம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் சிமெண்ட் ஆலை நிர்வாகம் அமைத்து இருந்ததார்சாலையை அகற்றி தண்ணீரை வெளியேற்ற வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதற்கு சிமெண்ட் ஆலை நிர்வாகம் உடன்படவில்லை.

இதுகுறித்து தகவல் அறிந்த அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்கள் அப்பகுதிக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு உடனடியாக ஜேசிபி இயந்திரங்களை உடனே வரவழைத்து தார் சாலையை அகற்றி மழைநீரை வெளியேற்றி ஏரிக்கரை உடையும் அபாயத்தில் இருந்து கிராம மக்களை காப்பாற்றினார்.

கிராம பொதுமக்கள் அனைவரும் அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்த பணிகளின் போது மாவட்ட ஆட்சியர் பொ. இரத்தினசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவராமன், செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், வருவாய்த்துறையினர் மற்றும் இதர அரசு அலுவலர்கள், கழக தோழர்கள் பலரும் உடனிருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 75அ வட்டத்தில் மனித நேய உதய நாள் மூன்றாம் நிகழ்ச்சி, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி கேரம் போட்டி நடைபெற்றது. சென்னை மாநகர மேயர் பிரியாராஜன் கேரம் போட்டியை துவக்கி வைத்தார். கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமிகண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன் கலந்து கொண்டார். எம்.எஸ்.மைனர் பாபு ஏற்பாட்டில் பி.ஜோசப், பி.எல்.ஏ.2 தலைமையில் எம்.எஸ்.சேகர், புல்லட் என்.பாஸ்கா, எஸ்.சி.பாபு, மெடிக்கல் கே.ஆர்.சதீஷ், பி.கே.ஆறுமுகம், ஜெ.செல்வம், பி.ஜெஸ்டின், எம்.எஸ்.மணி, பி.அறிவழகன், வி.விக்னேஷ்வரன், ஏ.குணசேகரன், கழக ச.கோட்டீஸ்வரன், ஓ.லட்சுமணராஜு, எம்.முருகன், கே.லட்சுமணன், தி.கிருஷ்ணகுமாரி, ர.சரசு, விஜயகுமாரி, ஜெயந்தி, மீனா, நித்தியமல்லி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் தலைமையில் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக பொருளாளர் தொழுவூர் பா.நரேஷ்குமார் ஏற்பாட்டில் 2 வது கட்டமாக 48 நபர்கள் உடல் உறுப்பு தானம் வழங்கும் விழா வேப்பம்பட்டில் நடைபெற்றது. இதில் 48 நபர்கள் உடல் உறுப்பு தான படிவத்தில் கையெதிட்டு அதற்கான படிவங்களை சென்னை ராஜீவ் காந்தி பொது மருத்துவமனை மருத்துவர்களிடம் வழங்கினர் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், விழாவிற்கு ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநகர செயலாளர் சன்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் எம்.பர்கத்துல்லாகான், மாவட்ட அமைப்பாளர்கள் கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், நடுகுத்தகை மோகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரவீன்குமார், ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், ஒன்றிய நிர்வாகிகள் ஞா.ரமேஷ், ஆர்.திலீப்ராஜ், இ.என்.சேகர், உதயகுமார், மோத்திஸ், எட்வின், ஏ.ஜெயபால், மணிவண்ணன் பத்மநாபன், டிங்கு உள்பட பலர் கலந்து கொண்டனர்.